Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com



**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654


# தினத்தளம்


PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,



**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959



மலர் Volume : 01 | இதழ் Issue : 060 | சனிக்கிழமை Saturday | 30.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தமிழக சட்டசபை ஜூலை மாதம் கூடுகிறது



தமிழகத்தில் நடைபெற்ற 17-வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. 12-வது முதல்-அமைச்சராக அக்கட்சியின் தலைவர் ஜோசப் விஜய் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், த.வெ.க.அரசின் முதல் சட்டசபை கூட்டம் ஜூலை மாதம் முதல் வாரத்தில் தொடங்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத்திலும், புதிய அரசின் முதல் சட்டசபை கூட்டத்திலும் கவர்னர் உரை நிகழ்த்துவது மரபாக இருந்து வருகிறது. த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டத்தில், கவர்னர் அர்லேக்கர் உரையாற்ற இருக்கிறார். கவர்னர் உரையில் புதிய அறிவிப்புகள் வெளியாகுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது உரையை தொடர்ந்து, அடுத்த 3 நாட்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். தொடர்ந்து, 2026-2027-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. ஏற்கனவே, இந்த ஆண்டு தொடக்கத்தில் தி.மு.க. அரசு தாக்கல் செய்தது இடைக்கால பட்ஜெட் ஆகும். இப்போது, தாக்கல் செய்யப்படுவதே முழு பட்ஜெட் ஆகும்.

த.வெ.க.தனது தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்வு,ஆண்டுக்கு6 கியாஸ் சிலிண்டர் இலவசம், பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு ஒரு பவுன் தங்கம், பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் என்று அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டது. எனவே, பட்ஜெட் அறிவிப்பில் தேர்தல் வாக்குறுதிகள் இடம்பெறுமா? என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதும், அடுத்த 4 நாட்கள் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும். இந்த விவாதத்தில் பங்கேற்று ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவார்கள். நிறைவாக, நிதித்துறை அமைச்சர்மரியவில்சன் பதில் உரை வழங்குவார்.

மானியக் கோரிக்கை விவாதம் தொடர்ந்து, துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும். ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 துறைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அந்தத்துறைகளின் அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். தொடர்ந்து,துறைசார்ந்த புதிய அறிவிப்புகளையும் அவர்கள் வெளியிடுவார்கள். அனேகமாக, ஆகஸ்டு மாதம் 2-வது வாரம் வரை சட்டசபை கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது.

# அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அதிரடி; திருச்செந்துார் கோவிலில் லஞ்சம் வசூலித்த அர்ச்சகர் சஸ்பெண்ட்; கோவிலுக்குள் பணி செய்ய தடை



தூத்துக்குடி: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு சாதாரண பக்தரைப் போல மாஸ்க் அணிந்து அதிரடி ஆய்வு மேற்கொண்ட இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷிடம், சிறப்பு தரிசனத்துக்காக ரூ.4,000 லஞ்சம் வாங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், இது குறித்து ஊடகங்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் ரமேஷ், "தவறு செய்தவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்" என உறுதியளித்தார்.

முருகப்பெருமானின் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் விசேஷ மற்றும் சிறப்பு தரிசனங்களுக்காக பக்தர்களிடம் அர்ச்சகர்களும், ஊழியர்களும் ஆயிரக்கணக்கில் பணம் வசூலிப்பதாகத் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அண்மையில் போலி தரிசன டிக்கெட் வழங்கிலட்சக்கணக்கில் மோசடி செய்த பெண் ஊழியர் ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். மேலும் திருச்செந்தூர் கோயிலில் தொடர்ந்து பல்வேறு புகார்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சர்ரமேஷ்இன்று காலை திருச்செந்தூர் கோயிலில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். கோயில் அதிகாரிகள் யாருக்கும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்காமல், தனது காரைகோயில்வளாகத்துக்கு வெளியே சற்று தொலைவில் நிறுத்தினார். பின்னர், சாதாரண டி-ஷர்ட் மற்றும் மாஸ்க் அணிந்து, தனது உதவியாளருடன் ஒரு சாதாரண பக்தரைப் போலச் சென்றார்.

அங்கு விரைவாக சாமி தரிசனம் செய்ய என்ன செய்ய வேண்டும் என்று விசாரிக்குமாறு தன் உதவியாளரை அர்ச்சகர்களிடம் அனுப்பினார். வந்திருப்பது அமைச்சர் என்று தெரியாமல், "தலைக்கு தலா ரூ.1,000 வீதம் நான்கு பேருக்கு மொத்தம் ரூ.4,000 கொடுத்தால் உடனே விஜபி (VIP) தரிசனத்துக்கு அழைத்துச் செல்கிறோம்" என்று அங்குள்ள அர்ச்சகர்கள் பேரம் பேசியுள்ளனர்.

தன்னிடம் தற்போது கைவசம் ரொக்கப் பணம் இல்லை என்று கூறிய அமைச்சர், அங்கிருந்த அர்ச்சகரின் கூகுள் பே எண்ணுக்கு ரூ.4,000 பணத்தை டிஜிட்டல் முறையில் அனுப்பியுள்ளார். பணம் கணக்கில் ஏறியதை அர்ச்சகர்கள் உறுதி செய்த அடுத்த நொடியே, தனது மாஸ்க்கை கழற்றி தான் யார்என்பதைஅமைச்சர் வெளிப்படுத்தினார்.

பணப் பரிவர்த்தனைக்கான டிஜிட்டல் ஆதாரத்துடன் அர்ச்சகர்களையும், அதற்குத் துணையாக இருந்த ஊழியர்களையும் அமைச்சர் கையும் களவுமாகப் பிடித்ததால் கோயில் வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அராஜகத்தில் ஈடுபட்ட கோயில் அர்ச்சகர்கள்மற்றும்அறநிலையத்துறை ஊழியர்களை கோயில் அலுவலகத்துக்கு வரவழைத்த அமைச்சர்,அவர்களிடம் இருந்து எழுத்துப்பூர்வமாக விளக்கக் கடிதம் எழுதி வாங்கியதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, அன்னதான கூடத்துக்குச் சென்று பக்தர்களோடு பக்தர்களாக அமர்ந்து உணவருந்தியஅமைச்சர்,அங்கு வழங்கப்படும் அன்னதான டிக்கெட் குறித்து ஆய்வு செய்தார். அங்கும் சில குழப்பங்கள் இருப்பதை அறிந்த அமைச்சர் ஊழியர்களைக் கடுமையாக எச்சரித்தார்.




## கோவை சித்தாபுதூர் பகுதியில்

# குப்பையில் கிடந்த தங்க சங்கிலியை எடுத்து அதனை, உரிமையாளரிடம் ஒப்படைத்தவருக்கு குவியும் பாராட்டு

கோவை சித்தாபுதூர் பகுதியைச் சேர்ந்தவர் சக்திவேல் (47). இவர் ஸ்ரீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்தில் ஒப்பந்ததூய்மைபணியாளராக கோவையில் பணியாற்றுகிறார். சாய்பாபா காலனி பகுதியில் 69 வது வார்டில், வழக்கம்போல் சக்திவேலும் அவரது நண்பர் மணிகண்டன் இருவரும் பணிக்குச் சென்று குப்பைகளை சேகரித்து தரம் பிரித்து வந்திருக்கின்றனர். அப்பொழுது மூதாட்டி ஒருவர் குப்பைகளை ஒரு பையில் போட்டு கொண்டு வந்து சக்திவேலிடம் கொடுத்தார். அப்பொழுது அதனைப் பெற்றுக் கொண்டு தரம் பிரிக்கமுற்பட்டபொழுது, அதில் பை ஒன்றில் தங்க சங்கிலி இருந்ததனை பார்த்தார். உடனே அந்த மூதாட்டி அழைத்து அந்த தங்க சங்கிலியை உரிமையாளரிடம் ஒப்படைத்தார். மூன்றரை சவரன் மதிப்புள்ள அந்த தங்கச் சங்கிலி சுப காரியத்திற்காக வாங்கி வைத்துள்ளனர். இதனை தூய்மை பணியாளர் சக்திவேல் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைத்த பொழுது மிகுந்த நன்றி உணர்வோடு அதனை பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்திருக்கின்றனர். இது குறித்து தகவல் அறிந்த சக்திவேல் பணியாற்றி வரும் சீனிவாசா பெஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரி வெங்கடேஷ், ஒப்பந்த பணியாளர் சக்திவேல் அவர்களை அடித்து கால்வை அணிவித்து மரியாதை செய்வதோடு, ரொக்க பரிசு வழங்கி பாராட்டி கௌரவித்தார். கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தூய்மைபணியாளர்சக்திவேல் அவர்களை அழைத்து பாராட்டி பரிசு வழங்கினார்.தான் செய்யும் வேலைக்கு நிறுவனம் ஊதியம் தருவதாகவும், அடுத்தவர்கள் புடவைகளுக்கு நாம் ஆசைப்படுதல் கூடாது என்று சக்திவேல் தெரிவித்தார். பணியாற்றி வரும் நிறுவனத்தில் இருந்தும் கார்ப்பரேஷன் அதிகாரிகள் தரப்பிலும் தன்னை அழைத்து நேர்மைக்கு பாராட்டு தெரிவித்தது தனக்கு மன நிறைவை தருவதாக தெரிவித்தார்.





திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வைகாசி விசாக திருவிழா முன்னேற்பாடுகள் குறித்து அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் ஆய்வு மேற்கொண்டார். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வைகாசி விசாக திருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் இன்று ஆய்வு மேற்கொண்டார். அவரை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## கோவை அருகே பலத்த காற்று மழை காரணமாக

# கோழிப்பண்ணைகள் முழுவதும் சேதமடைந்தன

### ஆயிரக்கணக்கான கோழிகள் நீரில் மூழ்கி இறப்பு



கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக காற்றுடன் கூடிய மழையும் பெய்து வருகிறது, இதனால் பல இடங்களில் தென்னை வாழை மரங்களும் நகரில் ஊர்களில் உள்ள தெருக்களில் இருந்த மரங்களும் கீழே விழுந்து பலத்த சேதம் அடைந்தது.

இந்த நிலையில் கோவை காரமடை தேவனாபுரம் பகுதியில் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது ஜாய் பார்ம்ஸ் மற்றும் கே ஆர் பார்ம்ஸ் இதில் ஆயிரக்கணக்கான கோழிகளைக் கொண்ட பண்ணை செயல்பட்டு வருகிறது.

இந்த பண்ணையில் திடீர் காற்று மழையின் காரணமாக பல இடங்களில் சேதம் அடைந்து பண்ணைக்குள் மழை நீர் புகுந்தது உடனே அந்த நீரை அகற்றமுடியாமல் சூழ்நிலையில் தண்ணீரில் இருந்த ஆயிரக்கணக்கான கோழிகள் முழுமையாக இறந்துவிட்டன.

உடனடியாக இறந்த கோழிகளை அப்புறப்படுத்தியும் சேதம் அடைந்த கோழிப்பண்ணையும் சீரமைக்கும் பணியை தற்பொழுது செய்து வருகிறார்கள். இந்த திடீர் காற்றின் காரணமாக கோழிப்பண்ணை சார்ந்தவர்களுக்கு பெருத்த தொழில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும் அதை புதுப்பிக்கவும் புதிதாக கோழி குஞ்சுகளை விட்டு பண்ணையை தொடங்க சற்று காலதாமதம் ஏற்படும் தெரிவிக்கின்றனர்.

## உலக பட்டினி தினத்தில் மனிதநேய சேவை

# காட்டுமன்னார்கோவில் பகுதி பேருந்து நிலையம் அருகே ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கிய த.வெ.க.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பகுதி பேருந்து நிலையம் அருகே உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



கடலூர்மாவட்ட செயலாளர் சீனுவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் அஜித் குமார் ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணகுமார், கார்த்தி ,கலித்தூஸ் ,அரவிந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உலகளவில் பட்டினியால் அவதிப்படும் மக்களின் நிலையை உணர்த்தும் வகையிலும்,உணவின்றி தவிக்கும் மக்களுக்கு உதவும் நோக்கத்திலும் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், பொதுமக்கள், முதியவர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு உணவு வழங்கப்பட்டன காட்டுமன்னார்கோவில் மக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம்,

பகுதியில் நடைபெற்ற இந்த சேவை நிகழ்ச்சியில் தமிழக வெற்றிகழகநிர்வாகிகள் கலியபெருமாள்,அருள்மணி, ராம.அரவிந்த், அப்துல் மாலிக் வெற்றிச்செல்வன் பிரகாஷ் பாலகணபதி அன்பு செழியன் ,பிரித்திவிராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்ட செயலாளர்சீனுவாசன்கூறுகையில்,"தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அறிவுறுத்தலின்படி உலக பட்டினி தினம் என்பது வெறும் நினைவு நாளாக இல்லாமல், பசியால் வாடும் மக்களுக்கு உதவும் நாளாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த மனிதநேய சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சமூக நலப்பணிகளில் தமிழக வெற்றி கழகம் ஈடுபடும்" என தெரிவித்தார்.இந்த நிகழ்ச்சி பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்வில் மாற்றுக் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் த.வெ.க.வில் இணைந்தனர்



உலகபட்டினிதினத்தை முன்னிட்டுத.வெ.கசார்பாக தமிழ்நாடு முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வானது நடைபெற்றது இந்த நிலையில்

கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராம நத்தம் பேருந்து நிலையத்தில் தலைமை கழக நிலையை செயலாளர் ராஜசேகர் தலைமையில் சிறப்பு அன்னதானமானது வழங்கப்பட்டது

இதில் தொகுதிக்குட்பட்ட மேற்கு மாவட்ட பொருளாளர் கண்ணதாசன் ஒன்றிய செயலாளர் நீலகண்டன் அரவிந்த் சீதாராமன் விஜயகுமார் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

குறிப்பாக இதில் சிறுபாக்கம் பகுதியைச் சேர்ந்த மதிமுக மாவட்ட பிரதிநிதி ஸ்.எம் முருகேசன் உள்ளிட்ட பல்வேறு மாற்றுக்கச்சினை சார்ந்த நிர்வாகிகள் ராஜசேகர் முன்னிலையில் தங்களை இணைத்துக் கொண்டனர்

மேலும் மரியாதை நிமித்தமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாவட்டத் துணைத் தலைவர் சிறுபாக்கம் க. செந்தில் முருகன் உள்ளிட்டோர் சந்தித்தனர் இந்நிகழ்வில் சிறுபாக்கம் பகுதியைச் சேர்ந்த வேல்முருகன், ஆனந்த நாயகன் கௌதமன் ராஜதுரை மணிகண்டன் செல்வம் உள்ளிட்ட தமிழக வெற்றிக் கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள்கலந்துகொண்டனர்

## செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம்

# அதிமுக நகர கழக செயலாளர் அலுவலகத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அதிமுக நகர கழக செயலாளர் அலுவலகத்தில் அதிமுக நகரக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தை மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கேசி சரவணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் செங்கல்பட்டு கழுத்து மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம், கழக அமைப்பு செயலாளர் தேர்தல் பொறுப்பாளருமான வாலாஜாபாத் கணேசன், மாநிலங்கவை உறுப்பினர் தனபால்,செய்யூர் சட்டமன்றத் உறுப்பினர் பெரும்பாக்கம் ராஜசேகர், அனைத்து உலகை எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் அனந்தமங்கலம் சுப்ரமணியன், உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர் மதுராந்தகம் தொகுதியில் அதிமுகவில் நின்று வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு மாற்றுக் கட்சிக்கு சென்றதால் அவரை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது வரவிருக்கும்


இடைத்தேர்தலில் அதிமுக வெற்றி பெற நம் அனைவரும் ஒன்றிணைந்து அதிமுக வெற்றி பெற செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், மாவட்ட பொருளாளர் எஸ்வந்த் ராவ், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் ஆர். டி .ரங்கநாதன், மற்றும் அதிமுக மகளிர் அணி நிர்வாகிகள் நகரக் கழக நிர்வாகிகள் என ஏராளமான கலந்து கொண்டனர்.



தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் மருத்துவர். கலை கதிரவன் அவர்கள் ஆலங்குளம் வடக்கு ஒன்றியம் மற்றும் மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது எடுத்த படம்

# நீர் நிலைகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி அறிவுறுத்தல்



ஈரோடு மாவட்டத்தில் காவேரி ஆறு, கொடிவேரி பவானி ஆறு மற்றும் பாசன வாய்க்கால்கள் பகுதிகளில் பாய்கின்றன. கோடைக்கால விடுமுறை என்பதா லும், வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், சிறுவர்,சிறுமியர்கள் குடும்பங்களுடனும், நண்பர்களுடனும் குளிக்கச் சென்று, ஆபத்தான பகுதிகளில் எதிர்பாரத விதமாக சிக்கி தண்ணீரில் மூழ்கி அல்லது நீரில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விடுகிறார்கள். குழந்தைகள் நீர்நிலைகளுக்குப் பெற்றோரின் பாதுகாப்புடன் மட்டுமே சென்று குளிக்க வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் சரியான வழிக்காட்டுதல் மற்றும் விழிப்புணர்வுகள் வழங்கி, நீர்நிலைகளில் ஆபத்தானப்பகுதிகளில்செல்வதைதடுக்கவேண்டும். பொதுமக்களும் நீர்நிலைகளில் அபாயகரமானப் பகுதிகளுக்குச் செல்லாமல், பாதுகாப்பானப் பகுதிகளில்மட்டுமேகுளிக்கவேண்டும்எனமாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி அறிவுறுத்தியுள்ளார்.


# ஈரோடு வடக்கு காவல் நிலைய சரகத்தில் போதை மாத்திரைகள் வைத்திருந்த நபர் கைது



ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில்,ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று (28.05.2026) ஈரோடு சி.என்.சி. கல்லூரி அருகில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனைக்காக வைத்துக் கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின்படி ஈரோடு வடக்கு காவல் நிலைய போலீஸார் சி.என்.சி. கல்லூரி பகுதிகளில் ரோந்து மேற்கொண்டு அங்கு சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த ஈரோடு, மாணிக்கம்பாளையம், முனியப்பன்கோவில் வீதியைச் சேர்ந்த அண்ணாதுரை மகன் கலைச்செல்வன் என்பவரை பிடித்து சோதனை செய்தபோது அவர் வசம் இருந்து ரூ.1,00,000/- மதிப்புள்ள 3000 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு நிலையம் கொண்டு வந்து, வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் அறிமுகமாக போகும் பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள்

டெல்லி:



அதிகரித்து வரும் ரூபாய் நோட்டுகளின் தேவையை சமாளிக்க பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் கொண்டு வரும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி மீண்டும் தீவிரமாக எடுத்து கொண்டு உள்ளது. பாட்னா மற்றும் மும்பையில் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் கடந்த இரண்டு வாரியக் கூட்டங்களில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கி விரைவில் ஒரு முன்னோடித் திட்டத்தை அறிவிக்க கூடும். ஒருபக்கம் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் அதிகரித்து கொண்டே வந்தாலும் கூட, நம் நாட்டில் காகித பணப்புழக்கம் 42.86 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது.

காகித ரூபாய் நோட்டுகளை பாதுகாப்புடன் அச்சிட கடந்த ஆண்டில் மட்டும், 5101.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. அதோடு கடந்த 2024-25 நிதியாண்டில் (FY25) இந்திய ரிசர்வ் வங்கி (RBI) புழக்கத்திலிருந்து நீக்கி, அழித்த அழுக்கடைந்த மற்றும் சேதமடைந்த காகித நோட்டுகளின் எண்ணிக்கை 238 கோடி (23.8 பில்லியன்) பீஸ்கள் ஆகும்.முந்தைய ஆண்டுடன்(FY24-21.24பில்லியன் நோட்டுகள்) ஒப்பிடும்போது, இந்த ஆண்டு அழிக்கப்பட்ட நோட்டுகளின் எண்ணிக்கை 12.3% அதிகரித்துள்ளது. காகித ரூபாய் நோட்டுகளை பராமரிப்பதில் ஏற்படும்



உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் 15 இடங்களில்

# ஏழை எளிய மக்களுக்கு மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் சரத்குமார் உணவு வழங்கினார்

உலகபட்டினிதினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும், பொதுமக்களுக்கும், ஏழை களுக்கும் தங்குதடையின்றி உணவு வழங்கத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டிருந்தார்

அதனை தொடர்ந்து தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணா நகர், தாம்பரம் முடிச்சூர் கிழக்கு தாம்பரம், சிட்லபாக்கம் உட்பட 15

இடங்களில் சுமார் 3000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது உணவு வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்த மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமாரை கட்சி நிர்வாகிகள் வரவேற்றனர் இதனை தொடர்ந்து பொது மக்களுக்கு அமைச்சர் சரத்குமார் உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்

இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தந்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சீ. ரமேஷ் அவர்களை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

# உப்பட்டியில் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்கும் சிறப்பு முகாம்

பந்தலூர் அருகே உப்பட்டி சிறப்பு நூலகத்தில் கோடைவிழாவை முன்னிட்டு கூடலூர் நுகர்வோர்பாதுகாப்புமையம், யாளர் சங்கீதா முன்னிலை வகித்தார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயபாடு உடைய 40 நபர்களுக்குத் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

100க்கு மேற்பட்டோர்




புளூமவுண்டன் நியர் விஷன் கலெக்டிவ், உப்பட்டி சிறப்பு நூலகம் ஆகியவை இணைந்து நடத்திய சிறப்பு இலவச கண் பரிசோதனைமற்றும்கண்ணாடி வழங்கும் முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு சிறப்பு நூலக பொறுப்பு நூலகர் நித்தியகல்யாணி தலைமை தாங்கினார். உப்பட்டி நூலக உதவிலாளர் சிவசுப்பிர மணியம் முகாமை துவக்கி வைத்தார்.

கண் தொழில்நுட்ப உதவியாளர் பாக்யா முகாமிற்கு வந்திருந்த பொதுமக்கள் அனைவருக்கும் மருத்துவக் கருவிகளைக் கொண்டு கண் பார்வைத் திறன் மற்றும் குறைபாடுகள் பரிசோதனை செய்தார். கிட்டப்பார்வை குறை-

இந்த முகாமில் இலவச கண் பரிசோதனை செய்து கொண்டனர். 10 பேர் கண் புரை அறுவை சிகிச்சை பரிந்துரை செய்தனர்.

இந்த முகாமில் உப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான முதியவர்களும், பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# போர் சூழல் காரணமாக தமிழகத்தில் உரங்களின் விலை கடும் உயர்வு

சென்னை: இஸ்ரேல் - ஈரான் இடையே மேற்கத்திய நாடுகளில் நிலவி வரும் போர் சூழல் காரணமாக தமிழகத்தில் உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். மேலும் இந்த விவகாரத்தில் ஒன்றிய - மாநில அரசுகள் தலையிட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் போர் பதற்ற சூழல் காரணமாகவும், ஹார்முஸ் நீரிணை வழியான வணிகக் கப்பல் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதால் உலகளாவிய உர விநியோகச் சங்கிலியில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு உரத்தை இறக்குமதி செய்வது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. உர நிறுவனங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் உரங்களின் விலை ஒரு மூட்டைக்கு ரூ.200 முதல் ரூ.650 வரை கணிசமாக அதிகரித்துள்ளது. இவற்றுடன், விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையும் 15 சதவீதம் வரைஉயர்ந்துள்ளதுவிவசாயிகளுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தி உள்ளது.

பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு கட்டணம் வசூலிப்பதை கண்டித்து

# கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு குளிக்கும் நூதன போராட்டம் நடத்தினர்

தென் தமிழகத்தின் சிறந்த சுற்றுலா தளமாக விளங்கும் குற்றாலத்தில் பழைய குற்றால அருவி, பேரருவி, ஐந்தருவி, சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட பல்வேறு அருவிகள் அமைந்துள்ள நிலையில், ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வரும் சீண் காலங்களில் இங்குள்ள அருவிகளில் குளிப்பதற்கு லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்நிலையில், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பழைய குற்றால அருவியில் குளிப்பதற்கு ரூபாய் 20 என்று கட்டணம் நிர்ணயிக்க ப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விவசாய சங்கத்தினர் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அருவியில் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்பி பெற கோரி குளிக்கும் போராட்டத்தை நடத்தினர். அப்போது பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்ப பெற கோரியும் செண்பகாதேவி அருவி அருகே அமைந்துள்ள செண்பகாதேவி அம்மனை தரிசிப்பதற்கு தடை விதிக்கும் வனத்துறையை கண்டித்தும் கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த நூதன போராட்டத்தினால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.





தமிழ்நாடு கைத்தறி மற்றும் ஜவுளி காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கே.கே.ஆனந்த் மோகன் இல்லத்திற்கு வருகை புரிந்து தனது வாழ்த்துக்களை தெரிவித்து விட்டு மற்றும் கே.கே. ஆனந்த் மோகன் MLA தந்தையார் அவர்களை சந்தித்து ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டார்.

# கோவையில் ‘கருப்பு’ திரைப்பட சிறப்பு காட்சி 250 பக்தர்கள் கண்டு ரசித்தனர்

கோவை மாவட்டம் ஒன்னிப்பாளையம் அருள்மிகு எல்லை கருப்பராயன் பக்தர்களுக்கான "கருப்பு" திரைப்பட சிறப்பு காட்சி கோவையில் உள்ள பிரபல திரையரங்கில் நடைபெற்றது.

பக்தி மற்றும் கிராமிய கலாசார பின்னணியில் உருவாகியுள்ள "கருப்பு" திரைப்படம், எல்லை கருப்பராயன் வழிபாட்டு மரபுகள், கிராம மக்கள் நம்பிக்கைகள் மற்றும் வீரஉணர்வுகளைமையமாககொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனை முன்னிட்டு ஒன்னிப்பாளையம் எல்லை கருப்பராயன் பக்தர்கள் சார்பில் சிறப்பு திரையிடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவை என் & டி பைபாஸ் சாலையில் அமைந்துள்ள திரையரங்கில் நடைபெற்ற இந்த காட்சிக்கு பக்தர்கள் பாரம்பரிய உடைகளில் ஆர்வமுடன் திரண்டனர். திரைப்படம் தொடங்குவதற்கு முன்பு கருப்பராயனுக்கு சிறப்பு பூஜையும், தீபாராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்கள் முழக்கத்துடன் உற்சாகமாக திரைப்படத்தை வரவேற்றனர்.

திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த காட்சிகள், கருப்பசாமி வேடங்கள், பக்தி சார்ந்த காட்சிகள் மற்றும் ஆக்ஷன் காட்சிகள் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. படம்முழுவதும்



பக்தர்கள் ஆரவாரம் செய்து ரசித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்கள் கூறுகையில், "கருப்பராயன் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் படம் உருவாகியுள்ளது. கிராமிய தெய்வ வழிபாட்டு மரபுகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் முயற்சியாக இது அமைந்துள்ளது" என்றனர். இந்தசிறப்புதிரையிடல் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒன்னிப்பாளையம் எல்லை கருப்பராயன் பக்தர்கள் குழுவினர் செய்திருந்தனர்.

முதலமைச்சர் விஜய்யின் ஆணைக்கிணங்க பட்டினி தினத்தை முன்னிட்டு

# கோவை ஆனைகட்டியில் பழங்குடிகள் வாழும் மலைவாழ் கிராமத்தில் அசைவ விருந்து அன்னதானம் செய்த இளம் பெண் தொழிலதிபர்

கோவை ஆனைகட்டியில் பட்டினி தினத்தை முன்னிட்டு முதல்வர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க பழங்குடிகள் வாழும் மலைவாழ் கிராம பகுதிகளில் அசைவ விருந்து அன்ன தானம் செய்து பசி பிணியை போக்கிய தமிழக வெற்றிக் கழகத்தை சார்ந்த இளம் பெண் தொழிலதிபர் உமா மகேஸ்வரி.

உலகபட்டினிதினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குமாறு, தமிழக வெற்றிக் கழக தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான சி. ஜோசஃப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், கஸ்தூரிநாயக்கன் பாளையம் பகுதியை சார்ந்த இளம் தொழில் அதிபரும், தமிழக வெற்றிக் கழக தொண்டருமான உமா மகேஷ்வரி, கோவை ஆனைக்கட்டி மலை பகுதியில் வாழும் மலை வாழ் பழங்குடிகளுக்கு அசைவ விருந்து வழங்கினார். பழங்குடிகள் மட்டுமின்றி அப்பகுதி வழிபோக்கர்கள், வாகன ஓட்டிகள் உட்பட 1,500க்கும் மேற்பட்டோருக்கு சிக்கன் பிரியாணி அன்ன தானம் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக வெற்றிக் கழகத்தைச் சார்ந்த உமா மகேஷ்வரி பேசும்போது, தமிழ்நாட்டின் முதல்வரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க, அன்னதானம் வழங்குவதாக தெரிவித்தார். பசி எனும் கொடுமையை நாட்டில் முற்றிலுமாக அகற்றவேண்டும் என்ற முதல்வர் விஜய் அவர்களின் உன்னதமான நோக்கத்திற்கு உறுதுணையாக இந்த அன்ன தானம்



சேவையை செய்வதாக தெரிவித்தார்.

முதியோர், பெண்கள், சிறுவர்கள் என பலருக்கும் அசைவ விருந்து அன்னதானம் வழங்கியபோது மனநிறைவுதந்ததாக தெரிவித்த உமா மகேஸ்வரி, பழங்குடிகள் வாழும் பகுதியில் அன்னதானம் வழங்கியது முதல்வர் விஜய் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி என தெரிவித்தார். இதுபோன்று சேவைகளை முன்பிருந்து செய்து வருவதாக தெரிவித்த அவர், இன்றைய தினம் மட்டுமின்றி இனி வரக்கூடிய நாட்களிலும் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும் என்றும், பசி இல்லாத மனித குலத்தை உருவாக்கும் தளபதி விஜய் அண்ணா அவர்களின் உன்னத நோக்கத்திற்கு என்றும் உறுதுணையாக செயல்படுவேன் என்றும் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# 10, 12ம் வகுப்பு பொது தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களைப் பாராட்டி கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(29.05.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 10, 12 -ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது, 100 சதவீதம் தங்களுடைய பள்ளிகளில் தேர்ச்சி பெற வைத்த அனைத்து தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களுக்கும் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியோர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் வரும் 2026-27 புதிய கல்வி ஆண்டில் அனைத்து பள்ளிகளும் சிறப்பான தொடக்கத்துடன்செயல்பட தலைமை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வியோடு நற்பண்புகளையும் கற்றுத்தர வேண்டும் என தெரிவித்தார்.ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2025-26 ஆம் கல்வியாண்டில் +2 பொதுத்தேர்வில் மாநிலத்தில் முதலிடமும், 10 -ம் வகுப்பு பொதுத் தேர்வில் கடந்த ஆண்டு பதினோராம் இடத்தில் இருந்து இக்கல்வியாண்டில் எட்டாவது இடத்திற்கு முன்னேறியது.

ஈரோடு மாவட்ட அனைத்து வகை பள்ளிகளிலும் 178 பள்ளிகள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி விழுக்காட்டை வழங்கியுள்ளன. 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 128 பள்ளிகள் 100% தேர்ச்சியினை வழங்கியுள்ளன. 10 மற்றும் 12 ஆகிய இரண்டு வகுப்புகளிலும் 100% தேர்ச்சி விழுக்காட்டினை 78 பள்ளிகள் வழங்கியுள்ளன. இப்பள்ளிகளை பாராட்டும் விதமாக தலைமை ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வெற்றி கேடயம் வழங்கிபாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தொடர்ந்து, மலைப்பகுதியில் பயிற்ற கன்னட வழி மாணவர்களுக்கு தமிழ் கற்றலை திறனை மேம்படுத்தி10-ம்வகுப்பு பொதுத்தேர்வில்தேர்ச்சி பெற உதவிய 4 ஆசிரியர்களுக்கும் மற்றும் தேர்வுக்கு துணைப்புரிந்த அலுவலர்களுக்கும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இ. மான்விழி, எழுத்தாளர் ஈரோடு கதிர் மாவட்ட கல்வி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, திருச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் திருச்சி, கோவை, தருமபுரி, சேலம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் (மே 30) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல்மற்றும்அதனை ஒட்டிய தமிழக பகுதிகளின் மேல்சுமார்3.1கிமீமுதல் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

தென்கிழக்கு அரபிக்கடல்மற்றும்அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ முதல் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இவை காரணமாக நாளை (மே 30) முதல் ஜூன் 1-ம் தேதி வரை ஒருசில இடங்களிலும், 2-ம் தேதி ஒரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 3, 4 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (மே 30) திருச்சி, நாமக்கல், நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, கரூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

மே 31, ஜூன் 1 ஆகிய தேதிகளில் நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், திருப்பத்தூர், திருப்பூர், சேலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி, தஞ்சாவூர், தருமபுரி, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழைபெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை அதிகபட்ச வெப்பநிலை ஒரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். மே 31 முதல் ஜூன் 2-ம் தேதி வரை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒரிரு பகுதிகளில் இடி,மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 105 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 85 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழககடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜூன் 2-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும்வீசக்கூடும்.எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சாக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் 12 செமீ, திருவண்ணாமலை மாவட்டம் ஆலப்புத்தூரில் 7 செமீ, செங்கம், கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணை, புத்தன் அணையில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது.

# "மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே.சிவகுமார் தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்" அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி



சென்னை: "மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம். மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே. சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்" என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு விரைவில் நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். போக்சோ குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை பெற்றுத் தரப்படும். கோவை வழக்கில் துரிதமாக செயல்பட்டு, ஒவ்வொரு நாளும் அப்டேட் கொடுத்துள்ளோம்.

மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவின் டி.கே.சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார். சர்ச்சை ஏற்படுத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். மேகேதாட்டுவில் கர்நாடகா அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம்.

இரு மாநில மக்களுக்கு இடையில் நிறைய தொழில் உறவுகள் உள்ளன. சட்டப்பூர்வமாக மட்டுமே அவர்கள் செயல்பட வேண்டும். டி.கே.சிவகுமார் தன்னிச்சையாக பொறுப்புணர்வு இல்லாமல் செயல்படுவதற்கு கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# "காரைக்காலுக்கான காவிரி நீர் பங்கு கிடைக்க உரிய நடவடிக்கை" முதல்வர் ரங்கசாமி உறுதி



புதுச்சேரி: காரைக்காலுக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீர் பங்கு கிடைக்க உரிய நடவடிக்கை எடுப்போம் என முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.

புதுச்சேரியில் அமைச்சராக பொறுப்பேற்ற என்.ஆர்.காங்கிரஸை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவை சட்டப்பேரவையில் உள்ள அவரது அறை இருக்கையில் முதல்வர் ரங்கசாமி இன்று அமரவைத்தார். அவரது அறையில் இருந்த சாமி படங்களுக்கு தீபம் காட்டி முதல்வர் பூஜை செய்தார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் முதல்வர் ரங்கசாமி கூறியது:"அமைச்சர்கள் இலாகா ஒதுக்காததால் பணிகள் முடங்கியுள்ளதாக கேட்கிறீர்கள். அரசு பணிகள் ஏதும் முடக்கப்படவில்லை. அனைத்து பணிகளும் நடக்கிறது.

தினமும் 20 கோப்புகளில் கையெழுத்திட்டு அனுப்புகிறேன். அடுத்த வாரத்தில் அமைச்சர்கள் நியமனம் இருக்கலாம். விரைவில் பேரவைத் தலைவர் யார் என்பது தெரியும்.

பேரவைத் தலைவர் தேர்தல், அமைச்சரவை விரிவாக்கம் ஆகியவை உங்களிடம் சொல்லிவிட்டுதான் செய்வேன். நியமன எம்எல்ஏக்களை பாஜக கேட்பதால்தான் இந்த தாமதமா என கேட்கிறீர்கள்.அதுபோல் ஏதும் இல்லை

பிரெஞ்சு மொழி பள்ளிகளில் நீடிக்க மத்திய அரசை கேட்டுள்ளேன். மீண்டும் வலியுறுத்துவேன். மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக கேட்கிறீர்கள். காரைக்காலுக்கு உரிய காவிரி நீர் கிடைக்க எப்போதும் புதுச்சேரி அரசு வலியுறுத்தும். காவிரி நீரை கேட்டு பெறுவோம். தமிழக அரசிடமும் கேட்போம். அவர்களும் தருவார்கள். நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீர் உரிய பங்கு கிடைக்க நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

# கவின் கொலை வழக்கு; சுர்ஜித்தின் தாயாரை கைது செய்த சிபிசிஐடி





திருநெல்வேலி: கவின் கொலை வழக்கில் சுர்ஜித்தின் தாயார் கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீசார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த கவின் செல்வகணேஷ் (24) மென்பொருள் பொறியாளராகவேலைபார்த்து வந்த நிலையில், திருநெல்வேலியை சேர்ந்த பெண்ணை காதலித்து வந்தார். இதுகுறித்து அறிந்த அந்தப் பெண்ணின் சகோதரர் சுர்ஜித் கடந்த ஆண்டு ஜூலை மாதம் பட்டப்பகலில் கவினை கொலை செய்தார்.காதல்விவகாரத்தில் மென்பொருள் பொறியாளர் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டது பெரும் பரபரப்பாக பேசப்பட்டது.


குறிப்பாக கொலையான கவின் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்பதால், சாதிய நோக்கத்தோடு இந்த கொலை நடைபெற்றதாகவும் கூறப்பட்டது. இந்த கொலை வழக்கு குறித்து முதலில் பாளையங்கோட்டை போலீசார் விசாரித்து வந்த நிலையில், பின்னர் வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. பெண்ணின் தந்தைசரவணன் மற்றும் தாய் கிருஷ்ணகுமாரி இருவரும் காவல்துறையில் உதவி ஆய்வாளர்களாக பணிபுரிந்து வரும் நிலையில், சிபிசிஐடி போலீசார் பெண்ணின் சகோதரர் சுர்ஜித்தை முதலில் கைது செய்தனர். அதன் பின்னர், விசாரணையில் அவரது பெற்றோரும் இந்த கொலையில் உடந்தையாக இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து முதல்கட்டமாக சுர்ஜித்தின் தந்தை சரவணனை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து உறவினர் ஜெயபால் என்பவரும் கைது செய்யப்பட்டார். இதையடுத்து இந்த கொலை வழக்கில் சுர்ஜித், அவரது தந்தை சரவணன், உறவினர் ஜெயபால் ஆகிய மூவரும்,நீதிமன்ற காவலில் உள்ளனர்.

இந்நிலையில் கவின் கொலை வழக்கில் புதிய திருப்பமாக தற்போது சுர்ஜித்தின் தாயாரும், துணை ஆய்வாளருமான கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த சிபிசிஐடி அதிகாரிகள், சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களின் அடிப்படையில் கிருஷ்ணகுமாரியை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண் காவலரான கிருஷ்ணகுமாரியை போலீசார் சிபிசிஐடி காவல் நிலையத்தில் இருந்து மருத்துவ பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பின்னர்அவரைநெல்லை 2-வது கூடுதல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# How do Indian ships cross risky Strait of Hormuz? Govt reveals, keeping some details secret



*India has welcomed several ships via the Strait of Hormuz – key sea route that is largely blocked for vessel movement due to the US–Iran war – bringing not just essential resources to the country amid global energy disruptions, but also appreciation for diplomatic efforts to have Indian movement continue in the volatile waterway.*

*Although the temporary ceasefire on April 9 stopped active combat, it has not led to the reopening of the Strait of Hormuz – the strategic waterway that normally handles about one–fifth of global oil and liquefied natural gas shipments. The future of the Strait of Hormuz remains one of the major obstacles in negotiations, with growing fears that the global economy could face further strain as pre–war oil reserves diminish.*

*A lot goes behind the scenes to have the Indian ships cross the critical stretch of which Iran is a de facto in charge due to its geographical advantage and has targeted many vessels in warning to the United States and Israel.*

*How do Indian ships cross risky Hormuz*

*Asked at a routine press briefing about the coordination between India, Iran, and the parties involved regarding movement of ships and which vessels are given a priority, the shipping ministry on Friday shared details of the efforts while keeping some information disclosed due to security reasons. "In terms of how we coordinate with India, Iran, how do we decide the priority, I would not like to, you know, tell you how we coordinate for obvious reasons. So we coordinate through MEA, and that is where we are," said Opesh Kumar Sharma, director of shipping at the Ministry of Ports at the inter–ministerial briefing on Friday.*

*He added that in terms of priority, it is decided in coordination with MOPNG [Ministry of Petroleum and Natural Gas], Ministry of Fertilizers, and thereafter the coordinated priorities prepared and through which we try and get the ships out.*

*Sharma informed that there are about 13 Indian–flagged vessels in the Strait of Hormuz – One is an LPG tanker, five are crude oil tankers, one is a chemical or a product tanker, there are three container ships, there are two bulk carriers, and there is one dredger, he said.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.